


விழுப்புரம் மாவட்டம், விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி கழக வெற்றி வேட்பாளர் அன்னியூர் சிவாவை ஆதரித்து கப்பியாம்பூலியூர் பகுதியில் 220 வாக்குச் சாவடி பூத்தில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர். காந்தி பொதுமக்களிடம் உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார். இதில் கழக சுற்றுச்சூழல் அணி மாநிலத் துணைச் செயலாளர் ஆர். வினோத் காந்தி , கப்பியாம்பூலியூர் மு.ஊராட்சி செயலாளர் பிச்சை முத்து, கி.செயலாளர் பிரபு, அரவிந்த், விசிக வேலு, வாழ்மன்னன், அரக்கோணம் நகர செயலாளர் வி.எல்.ஜோதி, ஒன்றிய செயலாளர்கள் பசுபதி, வடிவேலு, அரக்கோணம் நகர மன்ற தலைவர் லஷ்மி பாரி, மு.மாவட்ட துணைச் செயலாளர் ராஜ்குமார், மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எஸ். வினோத் எம்.சி., மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் வேதா சீனிவாசன், துணை அமைப்பாளர்கள் பி.எல்.டி.சிவா, ஜெனிஷ், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் தொன் போஸ்கோ, துணை அமைப்பாளர்கள் பிரகாஷ் எம்.சி., யுவராஜா மற்றும் இராணிப்பேட்டை மாவட்ட ,நகர,ஒன்றிய, பேரூர் நிர்வாகிகள் உடனிருந்தனர்.

### ஜூலை 18 தமிழ்நாடு நாள்:

# பள்ளி மாணவர்களுக்கான கட்டுரை, பேச்சுப்போட்டி!

சென்னை, ஜூலை 5 -

முதலமைச்சர் அவர்களால் தாய்த் தமிழ்நாட்டிற்கு தமிழ்நாடு என பேரறிஞர் அண்ணா அவர்கள் பெயர் சூட்டிய சூலை 18 ஆம் நாளினை “தமிழ்நாடு நாளாக” கொண்டாடப்படும் என அறிவிப்பு செய்யப்பட்டது. இவ்வறிவிப்பிற்கிணங்க 2022ஆம் ஆண்டு முதல் தமிழ்நாடு நாள் விழா சிறப்பாக கொண்டாடப்பெற்று வருகிறது.

தமிழ்நாடு நாள் விழா தொடர்பில் அனைத்து மாவட்டங்களிலும், 6 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவர்களுக்கு கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகள் நடத்தி முதல் மூன்று பரிசுகள் மாவட்ட அளவில் வழங்கப்பெறுவதுடன் முதல் பரிசு பெறும் மாணவர் சென்னையில் நடைபெறும் மாநிலப் போட்டியில் கலந்து கொள்ளும் வாய்ப்பினை பெறுவர்.

சென்னையில் நடைபெறும் மாநிலப் போட்டியில் கலந்து கொண்டு முதல் மூன்று இடம் வகிக்கும் மாணவர்களுக்கு சூலை 18 ஆம் நாளன்று நடைபெறும் தமிழ்நாடு நாள் விழாவில் பரிசு மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப் பெற்று வருகின்றனர்.

சென்னை மாவட்ட அளவில் நடைபெறும் மாவட்டப் போட்டி 09.07.2024 அன்று சென்னை, அண்ணா சாலையில் அரசினர் மதரசா ஐ ஆஜம் மேல்நிலைப் பள்ளியில் நடைபெறவுள்ளன.

இப்போட்டிகளில் வெற்றிபெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ.10,000/ இரண்டாம் பரிசு ரூ.7,000/ , மூன்றாம் பரிசு ரூ.5,000/ மற்றும் பாராட்டுச் சான்றிதழ் வழங்கிச் சிறப்பிக்கப் பெறுவர்.

போட்டிகளுக்கான தலைப்புகள்

ஆட்சிமொழி தமிழ் என்ற தலைப்பில் கட்டுரையும்

1. குமரி தந்தை மார்சல் நேசமணி, 2. தென்னாட்டு பெர்னாட்ஷா பேரறிஞர் அண்ணா, 3. முத்தமிழறிஞர் கலைஞர் கருணாநிதி என்கிற தலைப்பில் பேச்சுப் போட்டியும் நடைபெறும்.

மேற்கண்டவாறு தமிழ் வளர்ச்சி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

### முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழாவை முன்னிட்டு

# கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் 101 நபர்கள் இரத்ததானம்!

### மாவட்டச் செயலாளர் - மேயர் ரெ.மகேஷ் இரத்ததான முகாமை துவக்கி வைத்தார்!

கன்னியாகுமரி, ஜூலை 5 -

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த நாள் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் 101 நபர்கள் இரத்ததானம் வழங்கும் முகாம் நேற்று (4.7.2024 - வியாழக் கிழமை) ஆசாரி பள்ளம் பகுதியில் அமைந்துள்ள கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர் மருத்துவர். சி.பி. சுரேஷ் தலைமையில் நடைபெற்றது.

கன்னியாகுமரி கிழக்கு மாவட்டச் செயலாளர், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இரத்த தான முகாமை துவக்கி வைத்தார்.

நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர் பிரின்ஸ் பயஸ், உறைவிட மருத்துவர் ஜோசப் சென், மருத்துவமனை கண்காணிப்பாளர் கிங்ஸிலி, தி.மு.க. மாநில கலை, இலக்கியப் பகுத்தறிவுப் பேரவைச் செயலாளர் என்.தில்லை செல்வம், மாநில அயலக அணி துணைச் செயலாளர் எ.பாபு வினிபிரட், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் வி.ஜோசப் ராஜ், நாகர்கோவில் மாநகர செயலாளர் வழக்கறிஞர் ப.ஆனந்த், பகுதி செயலாளர் மு.ஷேக்மீரான், கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி துணை அமைப்பாளர்கள் பி.சுதாகர், ரெஞ்சித், எ.ஜெ.எஸ். பிரவின், மருத்துவ அணி நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கோவையில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள்:

# ஆசிய முதலீட்டு வங்கி அதிகாரிகள் ஆய்வு!

கோவை, ஜூலை 5 -

கோவையில் மெட்ரோ ரயில் திட்டப் பணிகள் குறித்து ஆசிய முதலீட்டு வங்கி அதிகாரிகள் ஆய்வு செய்தனர்.

சென்னை மெட்ரோ ரயில் சேவையைத் தொடர்ந்து கோவை, மதுரை ஆகிய நகரங்களில் மெட்ரோ ரயில் சேவையைத் தொடங்க தமிழக அரசு தயாராகி வருகிறது.

அந்த வகையில் மதுரை திருமங்கலம் மற்றும் ஒத்தக்கடை பகுதிகளை இணைக்கும் வகையில் ரூ.11,368 கோடியிலும், கோவை அவிநாசி சாலை மற்றும் சத்தியமங்கலம்சாலைவழித்தடங்களில் மெட்ரோ ரயில் திட்டத்துக்கு ரூ.10,740 கோடியிலும் விரிவான திட்டஅறிக்கைகள்ஒன்றிய அரசின் மூலதனப் பங்களிப்புபெறுவதற்காகசமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

ஒன்றியஅரசின்அனுமதி கிடைத்த உடன் மெட்ரோ ரயில் திட்ட பணிகள் தொடங்கப்பட உள்ளன. மதுரை மற்றும் கோயம்புத்தூர் திட்டங்களுக்கு நிதியுதவி செய்வதில் ஆசிய உள்கட்டமைப்பு முதலீட்டு வங்கி விருப்பம் தெரிவித்ததுடன், சென்னைமெட்ரோ ரயில் நிறுவனத்தின் குழுவுடன் இணைந்து மதுரையில் நேற்று முன்தினம், முதற்கட்ட ஆய்வைமேற்கொண்டது. இதனைத் தொடர்ந்து நேற்று கோயம்புத்தூரிலும் ஆய்வுமேற்கொண்டது. உக்கடம்பேருந்துநிலையத்தில் மெட்ரோ ரயில் பணிகளுக்காகஅதிகாரிகள்ஆய்வுசெய்தனர். கோவையில்உக்கடம் முதல் கோவை விமான நிலையம் வரை 20.4 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் அமைகிறது.




விக்கிரவாண்டி இடைத்தேர்தலில் பல்லாவரம் வடக்கு & தெற்கு பகுதி தி.மு.க. மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி தி.மு.க.க்கு தேர்தல் பணியாற்ற ஒதுக்கப்பட்டுள்ள. நந்தி வாடி ஊராட்சி பாகஎண் 137 க்கு உட்பட்ட பகுதிகளில் ஊராட்சி தேர்தல் பணி பொறுப்பாளர் காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட கழக துணை செயலாளர் இ. கருணாநிதி எம்.எல்.ஏ பாக பொறுப்பாளர் பல்லாவரம் வடக்கு பகுதி கழகச் செயலாளர் மண்டல தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை தலைமையில் மற்றும் செம்பாக்கம் வடக்கு பகுதி கழக செயலாளர் ஏ.கே.கருணாகரன் முன்னிலையில் வீடு வீடாகச் சென்று திராவிட மாடல் அரசு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பல்வேறு சிறப்பான திட்டங்களை எடுத்துரைத்து நீங்கள் அனைவரும் உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து பெருவாரியான வாக்குகள் வித்தியாசத்தில் உங்கள் வீட்டுப் பிள்ளையான அன்னியூர் சிவாவை வெற்றி பெற செய்யுங்கள் என கூறி வாக்குச் சேகரித்தார் அப்பொழுது கிராமத்தைச் சேர்ந்த மகளிர் திரண்டு இருந்து வரவேற்பு அளித்தனர் அப்போது க.ரமேஷ் ச.சிவகுமார் ஜெ.வி.சந்திரசேகர் ஜி.கருணா மூர்த்தி கோ. ஜானகிராமன் ஜெ. இன்சாமாம் லோ. டில்லிபாபு எம்.கமல்ராஜ் பி.கிஷோர் மணிரத்தினம் ஏ.டீசல்ராஜா மற்றும் நந்தி வாடி ஊராட்சி கழக செயலாளர் டீ.சாரதி ஊராட்சி கழக நிர்வாகிகள் உடன் இருந்தனர்.



விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டிஇடைத்தேர்தலில் சிவகங்கை மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட குண்டலிபுலியூரில் மாவட்ட கழக செயலாளரும், கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் கழக வேட்பாளர் அன்னியூர் சிவாவிற்கு வாக்குச் சேகரித்து பேசினார். உடன் மாவட்ட துணை செயலாளர் த.சேங்கைமாறன் உள்ளார்.

### சிவகங்கையில் - ரூ.50 லட்சத்தில் - மாமன்னர்கள்

# மருது பாண்டியர்களுக்கு சிலை! முதல்வருக்கு நன்றி!

### முன்னாள் எம்.எல்.ஏ., வே.ராஜசேகரன் பிறந்த நாள் விழாவில் அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு !

சிவகங்கை, ஜூலை 5 -

சிவகங்கையில் முன்னாள் எம்.எல்.ஏ .வே. ராஜசேகரனின் 85 ஆவது ஆண்டு பிறந்தநாள் மற்றும் 70 ஆண்டு பொதுவாழ்வினை பாராட்டும் நிகழ்ச்சி விழா குழு தலைவர் மூத்த வழக்கறிஞர் எம். மோகனசுந்தரம் தலைமையில் நடைபெற்றது.



இந்த நிகழ்ச்சியில் கலந்து கொண்டு வே.ராஜசேக ரனை பாராட்டி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரிய கருப்பன் பேசியதாவது:

சிவகங்கை நகர்மன்ற தலைவராகவும், சிவகங்கை ஊராட்சி ஒன்றிய பெருந்தலைவராகவும் ,சென்னை ஆர் .கே நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக வும் பணியாற்றியவர் ராஜசேகரன். இன்று 85வயதினை நிறைவு செய்கிறார். 70 ஆண்டுகள் பொது வாழ்வில் ஈடுபடுத்தி வருகிறார். தொடர்ந்து அரசியல், சமூக சேவைகளை செய்து வருகிறார் . அவர் நகர் மன்ற தலைவராக இருந்த பொழுது ஒன்றிய குழு தலைவராக பதவி வகித்த போதும் இப்பகுதியில் பல்வேறு நல்ல செயல்களை செய்துள்ளார். சிவகங்கை தொகுதி சட்ட மன்ற உறுப்பினராக தேர்வு செய்யப்பட்டிருந்தால் பல்வேறு திட்டங்களை சிவகங்கை தொகுதியில் நிறைவேற்றி இருப்பார். இன்னும் சிவகங்கை முன்னேற்றம் அடைந்திருக்கும்.

தான் எடுக்கும் முடிவில் உறுதியுடன் அதை நிறைவேற்றும் வகையில் செயல்படுபவர். இதை நான் அவரிடம் நேரிலேயே பல முறை கண்டிருக்கிறேன். அனைவரையும் ஈர்க்கும் வகையில் அவர் செயல்பாடுகள் அமைந்திருக்கும். அவர் நூறாண்டுகளுக்கு மேலாக வாழ்ந்து மக்கள் பணியாற்ற வேண்டும் என்று வாழ்த்துகிறேன். சென்னை ஆர்.கே.நகரில் சட்டமன்ற உறுப்பினராக பல்வேறு மக்கள் நலப் பணிகளை அங்கு செய்துள்ளார்.

சிவகங்கை காளையார் கோவில் பகுதிகளில் நூற்பாலை ஏற்படுத்தி 2000குடும்பங்களின் வாழ்வில் ஒளி ஏற்றி உள்ளார். இப்பணி மேலும் அதிகரிக்க வேண்டும். சிவகங்கையில்இப்பகுதி மக்களின் நீண்ட நாள் கோரிக்கையான மாமன்னர் மருது பாண்டியர்களின் சிலை ருபாய் 50 லட்சத்தில் வைக்கப்படும் என்று முதல்வர் அவர்கள் அறிவித்து உள்ளார் .இதற்காக முதல்வர். மு. க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றியை தெரிவித்து கொள்கிறேன். கடந்த மூன்று ஆண்டுகளில் முதல்வர் தளபதி ஆட்சியில் காரைக்குடியில் கவிஞர் முடியரசனார் சிலை, பாகனேரி நகரம்பட்டியில் சுதந்திர போராட்ட வீரர் வாளுக்குவேலி அம்பலத்திற்கு ரூபாய் 50 லட்சத்தில் மணிமண்டபம் மற்றும் சிலை பணிகள்சிராவயலில் மகாத்மா காந்தியும் கம்யூனிஸ்ட் தலைவர்தோழர் ஜீவாவும் சந்தித்த இடத்தில் மணிமண்டபம், சிவகங்கை ராணி வேலுநாச்சியாரின் தளபதிகளில் ஒருவரான குயிலிக்கு சிலை போன்ற பல்வேறு பணிகள் நடைபெற்று வருகின்றது. தலைவர் கலைஞர் வழியில் சுதந்திர போராட்டத்திற்காக பாடுபட்டவர்களை கண்டறிந்து அவர்களை மதித்திடும் வகையில் முதல்வர் அவர்கள் செயலாற்றி வருகிறார் .

இதற்காக முதல்வர் அவர்களுக்கு நாம் நன்றி செலுத்த வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே ஆர் .பெரிய கருப்பன் பேசினார்.

**பொன்னம்பல அடிகளார் பேச்சு!**

விழாவில் கலந்து கொண்டு தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் பேசியதாவது. நேர்மை, வாய்மை, உழைப்பு, ஆகிய மூன்றையும் கொண்டவராக வி. ராஜசேகரன் பணியாற்றி வருகிறார்.. சிவகங்கை மக்களின் நன்மதிப்பை பெற்றவராக திகழ்ந்தார். இது தவிர ஆர்.கே.நகர் தொகுதி சட்டமன்ற உறுப்பினராக தேர்ந்து எடுக்கப்பட்டு மிகுந்த துடிப்புடன் பணியாற்றியுள்ளார். அடித்தள மக்களின் உரிமைகளை காப்பாற்றுவதில் தனது பணியினை தொடர்ந்து ஆற்றி வருகிறார். இந்த விழாவில் மும்மத தலைவர்கள் கலந்து கொண்டது அவரது பணியை பாராட்டு விதத்தில் அமைந்துள்ளது. யாதும் ஊரே யாவரும் கேளிர் என்று முழங்கிய இடம் சிவகங்கை மாவட்டமாகும் இதேபோல் திருக்கோட்டியூ ரில் கோபுரத்தின் மீது நின்று ராமானுஜர் அனைவரும் கேட்கும் வகையில் பொது மக்களுக்கு மந்திரத்தை தெரிவித்தார். அதேபோல் மாமன்னர் மருது சகோதரர்கள், ராணி வேலுநாச்சியார்ஆகியோர் ஆண்டதும் இந்த மண்தான். இவர்களின் அடையாளமாக. வே.ராஜசேகரன் செயல்பட்டு வருகிறார். அவரிடம் ஒரு சமூகப் பார்வை உள்ளது. அதனால் தான் பல்வேறு பணிகளை செய்துள்ளார். இவர் நகர் மன்ற தலைவராக இருந்த போது குடிசைகளுக்கு வரியை ரத்து செய்துள்ளார். இதே போல் ஆர்.கே. நகர் தொகுதியில் குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றி உள்ளார். மனிதர்களில் அவர் ஒரு சமுதாய பற்றாளர் என்பது இதன் மூலம் தெரிகிறது. பெருந்தலைவர் காமராஜரை பின்பற்றி இன்று வரை அவரது வழியில் செயல்பட்டு வருகிறார்.

கப்பலோட்டிய தமிழர் வ .உ .சி யை பெருமைப்படுத்தியவர் பாரதியார். அவரது புகழை கொண்டு சேர்த்தவர் பாரதியார். அத்தகைய வழியில் இது போன்று அடித்தள மக்களுக்கும் ஏழை,எளிய மக்களுக்கு அவரது சேவை தொடரவேண்டும். .ராஜசேகரனின் பொதுவாழ்வு பணிக்காக அவரை பாராட்டுகிறேன்.

இவ்வாறு தவத்திரு குன்றக்குடி அடிகளார் பேசினார்.

**அமைச்சர் ராஜகண்ணப்பன் பேச்சு!**

அமைச்சர் ஆர். எஸ் . ராஜ கண்ணப்பன் பேசியதாவது.

ராஜசேகரன் அவர்களை சிறு வயதுமுதல் தெரியும். எனது தந்தையாருடன் நெருங்கி பழகியவர். அவரது அரசியல் மற்றும் சமூகப் பணிகளை நான் நேரில் பார்த்துஉள்ளேன். அவரால் தான் நான் அரசியல் பணியில் ஈர்க்கப்பட்டேன். இன்றும் இந்த 85, வயதிலும் அனைத்து நிகழ்ச்சிகளுக் கும் நேரில் சென்று வாழ்த்தி வருகிறார். அனைத்து மக்களாலும், அனைத்து சமுதாயத்தினராலும் பாராட்டும் வகையில் அவரது பணி உள்ளது. அவரது பணி தொடர வேண்டும் என்று வாழ்த்துகிறேன். எனது தொகுதி கமுதியில் அவரது முயற்சியால் நூற்பாலை துவங் கப்பட உள்ளது. இதில் நூற்று கணக்கானவர்களுக்கு வேலைகிடைக்கும். அவர்களது குடும்பங்கள் வளம் பெறும்.

இவ்வாறு அமைச்சர் ஆர்.எஸ்.ராஜ கண்ணப்பன் பேசினார்.

நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சர் ப.சிதம்பரம் எம்.பி உட்பட பலர் ராஜசேகரனை பாராட்டி பேசினார்கள்.




முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு நிறைவு விழா மற்றும் 101 வது பிறந்தநாள் விழாவினை முன்னிட்டு கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட தி.மு.க. மற்றும் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி சார்பில் 101 நபர்கள் இரத்ததானம் வழங்கும் விழா ஆசாரிபள்ளம் பகுதியில் அமைந்துள்ள கன்னியாகுமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் கன்னியாகுமரி கிழக்கு மாவட்ட மருத்துவ அணி அமைப்பாளர், மருத்துவர் சி.பி.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர், மேயர் ரெ.மகேஷ் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு இரத்ததான முகாமை துவக்கி வைத்தார். நிகழ்வில் மருத்துவக் கல்லூரி முதல்வர் பிரின்ஸ் பயஸ், உறைவிட மருத்துவர் ஜோசப் சென், மருத்துவமனை கண்காணிப்பாளர் கிங்ஸிலி, என்.தில்லைசெல்வம், எ.பாபு வினிபிரட், வி.ஜோசப் ராஜ், வழக்கறிஞர் ப.ஆனந்த், மு.ஷேக்மீரான், பி.சுதாகர், ரெஞ்சித், எ.ஜெ.எஸ்.பிரவின், மருத்துவ அணி நிர்வாகிகள், மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி நிர்வாகிகள், அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், நிர்வாகிகள், பேரூர், வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் உட்பட கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.